செ.வெ.எண்.409 நாள் 21.05.10

## பத்திரிக்கை செய்தி

குருதேவ் ரவீந்தரநாத் தாகூர் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரது 150வது ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடுவது குறித்து மத்திய அரசால் அமைக்கப்பட்ட தேசிய குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையில் 20.5.2010 அன்று டெல்லியில் நடைபெற்றது. மேற்காண் தேசியக் குழுவில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையின் பேரில் அவர்கள் சார்பாக மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் டெல்லியில் நேற்று (20.5.2010), மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9